RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1121

OPEN ACCESS

# பாரதியாரின் கல்விச் சிந்தனைகள்

**சீ. தண்டபாணி [அ, *]**

[அ] தமிழ்த்துறை, சாரதா கங்காதரன் கல்லூரி, வேல்ராம்பட்டு, புதுச்சேரி-605004, இந்தியா

# Bharathiyar's Educational Thoughts

**S. Dhandapani [a, *]**

[a] Department of Tamil, Saradha Gangadharan College, Puducherry – 605004, India

* Corresponding Author: seenudhanda@gmail.com

Received: 25-08-2021
Revised: 02-08-2022
Accepted: 06-08-2022
Published: 10-09-2022

Check for updates

## ABSTRACT

Mundasukavi Bharathiyar is the one who made a great revolution in the world of literature by making poetry a profession and that profession for the people of the country. Bharathiyar was a multilingual scholar who paved the way for human society's development by contributing works in a variety of fields. It is very difficult to give a definite single definition of the concept of "education" as the concept of education is used in many different contexts. However, the topic of Thoughts on Education is explored in the hope that explanations of education can be derived from the way in which the word and concept of education are used. Education is required for society to thrive rather than perish. Education without purpose is like wandering in the forest without knowing the way. Education is an essential factor for social change. It has been discussed in "Classifications of Educational Objectives" that the aim of education is to develop good or to eliminate scientific attitudes. A comparison has been discussed in the topic of "Educational Thinkers and Bharati—a comparison" with the aim of comparing and expressing knowledge about the human activity of "education" which helps people's knowledge, skills, and development, and what kind of change in human beings and society as a result of education, what educationists and philosophers have found out and tried to bring about in society. It is natural for everyone to have certain norms of life according to their stage in life. And Bharathiyar's educational ideas and social applications are discussed in order to emphasise that certain ethics are essential for everyone to fulfil their life's needs and to live together with others.

**Keywords:** Educational Ideas, Bharathiyar, Educational Thinkers, Mundasukavi

## முன்னுரை

கவிதையைத் தொழிலாக்கி அத்தொழிலையும் நாட்டு மக்களுக்காக்கி இலக்கிய உலகிலே மாபெரும் புரட்சியை உண்டாக்கியவர் 'முண்டாசுக்கவி' பாரதியார். பன்மொழி கற்றுப் பல்துறையில் தனது படைப்புகளைத் தந்து, மானுட சமூகத்தின் வளர்ச்சிக்கான வழித்தடத்தை அமைத்துக் கொடுத்தவர் பாரதியார். இயற்கை, தேசியம், இனம், கலாச்சாரம், மொழி, பெண்ணியம், சமூகம், அரசியல், சமத்துவம் மற்றும் விடுதலை முதலான அனைத்திலும் தனது சிந்தனையைச் செலுத்திய பாரதியின் பாடல்களில் காணலாகும் 'கல்வி' குறித்த சிந்தனைகளை ஆராயும் நோக்கில் இக்கட்டுரைப் பயணிக்கின்றது.

## கல்வி குறித்த சிந்தனைகள்

### கல்வியை அறிதல்

'கல்வி' என்ற தமிழ்ச் சொல்லுக்கு இணையான ஆங்கிலச்சொல் எஜுகேஷன் (Education) என்பதாகும். இதன் மூலச்சொல் இலத்தீன் மொழிச் சொல்லான எஜுகேர்(Educare) என்பதாகும். இதற்கு 'வளர்ப்பது' என்று பொருள். இதேபோல் எஜுகீர்(Educere) என்ற சொல்லும் உண்டு. இதற்கு 'வெளிக்கொணர்வது' என்று பொருள். இவை எஜுகேடம் என்னும் சொல்லிலிருந்து பெறப்பட்டவையாகும். இச்சொல்லுக்குப் 'பயிற்றுவித்தல்' என்பது பொருளாகும். இதனால் 'கல்வி' என்பதற்கு 'வளர்ப்பது' அல்லது 'வெளிக்கொணர்வது' என்று சொல்லின் வழியில் பொருள் புலப்படுகிறது (Balasubrahmanyam, 2005).

மனிதரிடத்தில் மண்டிக்கிடக்கும் அறியாமை இருளகன்று அறிவொளி பரவ வேண்டும் என்று விரும்பியவர் பாரதி. அவரது

"இருளை நீக்கி ஒளியினைக் காட்டுவாய்" என்ற வரியிலும் "வித்தை வளரும்", "உட்செவி திறக்கும்" என்ற வரியிலும் 'கல்வி' என்பது 'வளர்ப்பது' என்ற சிந்தனையில் வெளிப்பட்டுள்ளது (Balasubrahmanyam, 2005).

"உட்செவி திறக்கும் அகக்கண் ஒளிதரும்

அக்கினி தோன்றும் ஆண்மை வலியுறும்"

என்ற வரிகளில் 'கல்வி' என்பது 'வெளிக்கொணர்வது' என்ற சிந்தனையில் வெளிப்பட்டுள்ளது. மேலும் 'கல்வி' என்ற கருத்து பல்வேறு சூழல்களில் பல பொருள்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்றாலும் பரந்த நிலையில், ஒருவரின் மனதில், நடத்தையில், உடல் திறனில், வளர்ச்சிக்குரிய தாக்கத்தை உண்டு பண்ணும் எச்செயலையும் அல்லது அனுபவத்தையும் 'கல்வி' எனலாம் என்ற பொதுக் கூற்றுக்குப் பொருந்துவதாகவும் உள்ளது (Rajendran, 2005).

## கல்வியைப் பெறுதல்

### கற்பதில் ஆர்வம்

எல்லாத் தொழிலுக்கும் ஆர்வம் முக்கியம் என்றாலும் கல்விக்கு ஆர்வம் மிக மிக முக்கியம் என்பதைக் "கல்வியதை விடேல்"- என்றும் "நூலினைப் பகுத்துணர்" என்றும் பாரதி குறிப்பிட்டிருப்பது, கற்கும் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற சிந்தனையில் வெளிப்பட்டுள்ளது (Rajendran, 2005).

### கற்பதற்கான நூல்கள்

மனிதன் கற்க வேண்டிய நூல்கள் எண்ணற்றவை. ஆனால் கற்கும் மக்களின் வாழ்நாளில் பல காரணங்களால் கல்வியைக் கற்க முடியாமல் பல நாட்கள் கழிந்து விடுகின்றன. 'எண்' என்று சொல்லக்கூடிய கணிதமும் 'எழுத்து' என்று சொல்லக்கூடிய இலக்கியமும் வாழும் மனிதர்களுக்கு இரு கண்கள் போன்று அமைகின்றன என்று வள்ளுவர் வலியுறுத்துகிறார். (எண்ணெனப - குறள்: 392). மனிதர்களுக்கான முழுமையான அறிவுத்திறனை இவ்விரு நூல்கள் மட்டுமே தந்து விடாது என்பதால் அறிவுக்கு ஆதாரமாகிய நூல்கள் பலவற்றையும் ஆராய்ந்து கற்க வேண்டும் என்று அவ்வையார் வலியுறுத்தியுள்ளார் (Rajendran, 2005).

பாரதியாரும் தனது புதிய ஆத்திசூடியில் வரலாறு, நீதிநூல், உலக வழக்கு நூல்கள், வானசாத்திரம் போன்ற வாழ்க்கைக்குப் பயனுடைய நூல்களைக் கற்றுத் தேர்ந்திட வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

"சரித்திரம் தேர்ச்சி கொள்"

"நீதிநூல் பயில்"

"லோகநூல் கற்றுணர்"

"வானநூற் பயிற்சி கொள்"

"வேதம் புதுமை செய்"

மேலும்,

"ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்

ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்

மந்திரம் கற்போம் வினைத் தந்திரம் கற்போம்

வானை அளப்போம் கடல் மீனை அளப்போம்

சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்

சந்தி தெருப்பெருக்கும் சாத்திரம் கற்போம்

காவியம் செய்வோம் நல்ல காடு வளர்ப்போம்

கலை வளர்ப்போம் கொல்லர் உலை வளர்ப்போம்

ஓவியம் செய்வோம் நல்ல ஊசிகள் செய்வோம்

உலகத் தொழில் அனைத்தும் உவந்து செய்வோம்"

என்று தொழிற்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதை ஆணித்தரமாக வலியுறுத்தி உள்ளார் (Rajendran, 2005).

மேலும் கற்பதற்கான நூல்கள் எவை எவை என்று பட்டியலிட்டுத் தந்ததுடன் உண்மையும் நன்மையும் கலந்த நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கற்க வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றார்.

"நூறு நூல்கள் போற்றுவாய் -மெய்கூறும்

நூலில் ஒத்தியல்கிறாய் போ போ போ"

"மெய்ம்மை கொண்ட நூலையே - அன்போடு

வேதமென்று போற்றுவாய் வா வா வா

பொய்ம்மை கூறலஞ்சுவாய் வா வா வா

பொய்ம்மை நூல்களெற்றுவாய் வா வா வா" (Rajendran, 2005).

## கற்றோர் துணைக்கொண்டு நூற்பொருளறிதல்

நல்ல நூல்களைக் கற்றறிந்தவரைத் துணைக்கொண்டு நூற்பொருள் அறிதலே சிறப்புடைச் செயலாகும். பொதுவாக மனிதன் எதையெல்லாம் கற்றுக் கொள்கிறானோ, அதையெல்லாம் 'கல்வி' என்பதற்குள் அடக்கி விடலாம்.

"தேர்ச்சி கொண்டு பல சாத்திரங்கற்று" (ஞானப்பாடல், ஒளியும் இருளும்- 42),

"சூரரைப்போற்று"

"புதியன விரும்பு"

"பெரிதினும் பெரிது கேள்"

என்ற பாரதியின் பாடல் வரிகளில் நூலையும் நூலாசிரியரும் நன்கு தேர்ந்தெடுத்து, நூற்பொருள் அறிதல் வேண்டும் என்ற சிந்தனை வெளிப்படுகிறது (Rajendran, 2005).

### கசடற கற்றலும் கற்றபடி நிற்றலும்

கற்கவேண்டிய நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்து நூற்பொருளுணர்ந்து குற்றமில்லாது கற்கவேண்டும். கற்றறிந்த நல்லொழுக்க நெறிப்படி வாழ்க்கையில் நடந்து கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லையெனில் கற்ற கல்வியால் யாதொரு பயனும் ஏற்படாது என்கிறார் பாரதியார் (Puliyur Kesigan, 2010).

"சொல்வது தெளிந்து சொல்"

"அறிவிலே தெளிவு நெஞ்சிலேயுறுதி"

"நூலினைப் பகுத்துணர்"

"கற்றது ஒழுகு"

"மெல்லத் தெரிந்து சொல்"

"பல கற்றும் பல கேட்டும்

பயன் ஒன்றும் இல்லையடி" (Rajendran, 2005).

### கற்றதைப் பிறர்க்கு எடுத்துரைத்தல்

மனிதன் தான் பெறுகின்ற கல்வியால் தன்னை மேம்படுத்திக் கொண்டு, தான் பெற்ற கல்வி அனுபவத்தைப் பிறர்க்கும் எடுத்துரைக்க வேண்டும் என்பதும் ஒருவகையில் கல்வியின் பொருளாகும் (Rajendran, 2005). நம்மிடத்தில் புத்தாக்கச் சிந்தனைகள் தோன்றினால் தான் சமூகத்தில் அவை பிரதிபலித்துச் சமூகத்தையும் மேம்படுத்தும். இச்சிந்தனையைப் பாரதியாரின் பாடல் வரிகளிலும் காண முடிகின்றது.

"அறிவிலே தோன்றில் அவனியிலே தோன்றும்"

"மேலறிவு

தன்னாலே தான் பெற்று சக்தி சக்தி சக்தியென்று

சொன்னால் அதுவே சுகம்"

"தேசத்தைக் காத்தல் செய்"

மேலும்,

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்

பரவும்வகை செய்தல் வேண்டும்"

"சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்

தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்"

என்று பாடிய பாரதியின் வரிகள் மொழிப் போராட்டத்திற்கானது மட்டுமல்ல (Rajendran, 2005); அனைவருக்குமான அடிப்படைத் தாய்மொழிக் கல்வி உரிமைக்கானது என்பது இங்கு நினைவு கூறத்தக்கது.

நாம் கற்றதைப் பிறர்க்கு எடுத்துரைக்கும்போதுதான் நம்மிடத்தில் இருக்கும் அச்சம் அகலும், ஆற்றல் பெருகும் என்பதனை,

"அச்சந்தீரும் அமுதம் விளையும்;

வித்தை வளரும்; வேள்வி ஓங்கும்;

அமரத் தன்மையும் எய்தவும்

இங்கு நாம் பெறலாம் இஃதுணர்வீரே"

என்ற பாரதியின் வரிகளால் உணரலாம் (Rajendran, 2005).

## கல்வி நோக்கங்களின் வகைபாடுகள்

நமது கலாச்சாரத்தைப் பாதுகாப்பதும் அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்வதும் வளப்படுத்துவதும் கல்வி நோக்கங்களில் தலையான வகைகளாகும்.

ஒரு நாட்டின் கல்வி நோக்கங்கள் அந்நாட்டுச் சூழலின் அடிப்படையில் ஒவ்வொரு நிலைக்கேற்ப பயன்தரத்தக்க வகையில் தனிநபர் நோக்கங்கள், சமுதாய நோக்கங்கள், தேசிய (அ) பரந்த நோக்கங்கள் என்ற மூன்று முக்கிய அடிப்படைகளைக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றன.

### தனிநபர் நோக்கங்கள்

தனிநபரின் உடல் வளர்ச்சி, உள்ள வளர்ச்சி, ஆன்மீக வளர்ச்சி, நுண்ணறிவு வளர்ச்சி, நன்னடத்தை வளர்ச்சி, நன்நெறி வளர்ச்சி, அழகுணர்வு வளர்ச்சி, விழும வளர்ச்சி முதலானவை தனிநபர் நோக்க அடிப்படையிலேயே நிறைவு பெறுகின்றன.

#### உடல் வளர்ச்சி

“உடம்பை வளர்த்தேன் உயிரை வளர்த்தேனே” என்பார் திருமூலர். கல்வியறிவு பெற வேண்டுமென்றால் அதற்கு உடல் நலமும் உள நலமும் அவசியம் என்பதை உணர்ந்தவர் பாரதி என்பதற்கு அவர் பாடல் வரிகளே சான்றாகும்.

“உடலினை உறுதி செய்”

“ஊண்மிக விரும்பு”

“வயிற்றுக்குச் சோறிட வேண்டும்”

“ஐம்பொறி ஆட்சிகொள்”

“தவத்தினை நிதம்புரி”

“நாளெல்லாம் வினை செய்”

என்ற பாடல் வரிகள் உடலினைப் பேணிக் காக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன (Rajendran, 2005).

#### உள்ள வளர்ச்சி

“உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்”,

“அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி”

அறிவிலே தெளிவு பிறந்தால்தான் உள்ளத்திலே உறுதி பிறக்கும். உள்ளத்தில் உறுதி பிறந்தால்தான் உண்மை ஊற்றெடுக்கும். உள்ளத்தில் உண்மையொளி உண்டானால்தான், வெளிப்படும் வாக்கு வெற்றியைத் தன் வசப்படுத்தும் என்று உள்ள வளர்ச்சி குறித்தும் குறிப்பிட்டுள்ளார் (Meiyappan, 2000).

மனிதன் தனக்கு நேர்கின்ற இன்னல்களைச் சுமையாகக் கருதினால் அந்த மனச்சுமையே மனிதனை அழித்து விடும். எனவே சுமை கண்டு அஞ்சாமல் எதிர்கொள்ளும் துணிவு பெற வேண்டும் என்கிறார் (Meiyappan, 2000).

“சுமையினுக்கு இளைத்திடேல்”

### ஆன்மீக வளர்ச்சி

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பது சொல்லளவில் இல்லாமல் மனதளவில் ஏற்றுக் கொண்டு கடைபிடிக்க வேண்டியது அவசியமாகும். தெய்வத்தின் பெயரால் பற்பல சண்டைகள் போடாமல், தெய்வம் ஒன்று என்ற நம்பிக்கையில் ஒன்றுபட்டு இருப்பதே ஆன்மீக வளர்ச்சி ஆகும் (Meiyappan, 2000).

"பாருக்குள்ளே தெய்வம் ஒன்று- இதில்

பற்பல சண்டைகள் வேண்டாம்"-

"வலிமை உடையது தெய்வம்- நம்மை

வாழ்ந்திடச் செய்வது தெய்வம்",

"சிறியரை மேம்படச் செய்தால்- பின்பு

தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்"

### நன்னடத்தை வளர்ச்சி

மனிதன் தனக்கும் பிறர்க்கும் கெடுதல் இல்லாத நன்னடத்தைகளைப் பின்பற்றி வாழ வேண்டும் என்று விரும்பிய பாரதி, தனது புதிய ஆத்திசூடியில் நன்னடத்தைக்கான வழிமுறைகளைத் தந்துள்ளார்.

"ஏறுபோல் நட"

"காலமழியேல்"

"தூற்றுதல் ஒழி"

"நன்று கருது"

"நேர்படப் பேசு"

"மானம் போற்று"

"யாரையும் மதித்து வாழ்"

"ரீதி தவறேல்"

"பொய்மை இகழ்"

"துன்பம் மறந்திடு"

"ஈகை திறன்"

இதுபோன்ற நன்னடத்தைகளை மனிதன் பின்பற்றினால்தான் வாழ்வில் மனிதனும் சிறக்க முடியும். நாடும் நன்னிலையில் இயங்கும் (Meiyappan, 2000).

### சமுதாய நோக்கங்கள்

ஒரு நாட்டின் சமுதாய வளர்ச்சி, மாற்றம், நவீனமயமாக்கல் முதலான முக்கியப் பணிகளின் அடிப்படையில் சமுதாய நோக்கங்கள் அமைகின்றன. அறிவார்ந்த சமுதாய உருவாக்கம், சமூக ஒட்டுணர்வு வளர்ச்சி, சமுதாய மதிப்புகளை உணர்த்துதல், சமுதாயப் பொருத்தப்பாட்டை வளர்த்தல், சமுதாயப் பண்பாட்டினை வளர்த்தல், கூட்டுறவின் மதிப்பை உணர்த்துதல் முதலான சமுதாய நோக்கங்கள் கல்வியின் மூலமாகவே சமுதாய வளர்ச்சிக்கு துணைபுரிகின்றன.

"வீதி தோறும் இரண்டொரு பள்ளி

நகர்களெங்கும் பலப்பல பள்ளி

தேடு கல்வியிலாதொருஊரைத்

தீயினுக்குக்கிரையாக மடுத்தல்",

"பள்ளித்தலமனைத்தும் கோயில் செய்குவோம்"

"வெள்ளத்தின் பெருக்கைப்போற் கலைப்பெருக்கும்

கவிப்பெருக்கும் மேவுமாயின்

பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம்

விழிபெற்றுப் பதவி கொள்வார்"

என்ற பாரதியின் பாடல் வரிகளில் சமுதாய வளர்ச்சிக்கான சிந்தனைகள் மேலோங்கி இருப்பதை உணரமுடிகிறது (Meiyappan, 2000).

## தேசிய (அ) பரந்த நோக்கங்கள்

தேசிய அளவிலான, உலக அளவிலான கல்வி நோக்கங்களைப் பரந்த நோக்கங்கள் எனலாம். நாட்டின் வளங்கள் பற்றிய அறிவை அளித்தல், தேசிய ஒருமைப்பாடு, பன்னாட்டுணர்வு முதலான பரந்த நோக்கங்கள் கல்வியின் மூலமாகவே நிறைவு பெறுகின்றன. உருவத்தால் நாம் வேறுபட்டிருந்தாலும் உணர்வால் ஒன்றுபட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதே பாரதியாரின் பரந்துபட்டச் சிந்தனையாகும் (Meiyappan, 2000).

"வண்ணங்கள் வேற்றுமை பட்டால்- அதில்

மானுடர் வேற்றுமை இல்லை

எண்ணங்கள் செய்கைகள் எல்லாம்- இங்கு

யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்",

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்

தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்

இறவாத புகழுடைய புதுநூல்கள்

தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்"

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்

பரவும்வகை செய்தல் வேண்டும்"

## கல்விச் சிந்தனையாளர்களும் பாரதியும் - ஓர் ஒப்பீடு

கல்விக்குத் தத்துவஞானிகள், தேசியத் தலைவர்கள், உளவியலாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் பொது மக்களால் பல விதமான விளக்கங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. இந்த வரையறைகள் மக்களுடைய கருத்தையும் நாட்டையும் மற்றும் தனிப்பட்ட சூழ்நிலையையும் அடிப்படையாகக் கொண்டு வெவ்வேறு பார்வையில் உருவாக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் கல்விச் சிந்தனையாளர்களின் சிந்தனைகளோடு ஒன்றிடும் பாரதியாரின் சிந்தனைகளில் சிலவற்றை எடுத்துரைக்கும் பணியை இத்தலைப்பு ஏற்றுள்ளது.

## இந்தியச் சிந்தனையாளர்கள்

### சுவாமி விவேகானந்தர்

"இயற்கையாக மனிதனுள்ளே புதைந்துள்ள தெய்வீகமான பூரணத்தை வெளிக்கொணர்வதே கல்வியாகும்"

### மகான் அரவிந்தர்

"ஆன்மா தனக்குள் இருந்தே முயன்று வளர உதவுவது கல்வியாகும்"

### பாரதியாரின்

"உட்செவி திறக்கும் அகக்கண் ஒளிதரும்;

அக்கினி தோன்றும் ஆண்மை வலியுறும்"

என்ற சிந்தனை, சுவாமி விவேகானந்தர், மகான் அரவிந்தர் சிந்தனைகளோடு ஒன்றிப் போவதைக் காணமுடிகிறது (Meiyappan, 2000).

### குருநானக்

"தன்னை உணர்வதும் மக்களுக்குப் பணி புரிவதும் கல்வியாகும்"

### பாரதியாரின்

"தேர்ச்சி கொண்டு பல சாத்திரங் கற்று", ஒளியும் இருளும்-

என்ற சிந்தனை குருநானக்கின் கல்விச் சிந்தனையோடு ஒன்றுகிறது (Meiyappan, 2000).

### கௌடில்யர்

"தன்னுடைய நாட்டைப் பற்றிப் பெருமைபடும்படி மக்களுக்குப் பயிற்சி அளிக்கும் செயல்பாடே கல்வி" இச்சிந்தனையோடு பாரதியாரின்,

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்

பரவும்வகை செய்தல் வேண்டும்"

"சேமமுற வேண்டுமெனில் தெருவெலாம்

தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்",

என்ற சிந்தனை ஒன்றுகிறது (Meiyappan, 2000).

### ரிக் வேதம்

"ஒருவரைத் தற்சார்புடையவராகவும் சுயநலம் இல்லாதவராகவும் உருவாக்குவது கல்வியாகும்" இச்சிந்தனையோடு பாரதியாரின்,

"கற்றுத் தெளிந்த பின்னும் கிளியே- கவலைப்பட லாகுமோ?

பலகற்றும் பலகேட்டும் பயனொன்றுமில்லையடி"

என்ற சிந்தனை ஒன்றுகிறது (Rajendran, 2005)

## 3.2 மேலை நாட்டுச் சிந்தனையாளர்கள்

### அரிஸ்டாட்டில்

"ஒருங்கிணைந்த வளர்ச்சி செயல் போக்கிற்கான கல்வி, வலுவான உடலில் வலுவான உள்ளம்"

### பெஸ்டலாசி

"கல்வி என்பது மனிதனின் உள்ளார்ந்த ஆற்றலின் இயல்பான ஒருங்கிணைந்த படிப்படியான வளர்ச்சியே" இச்சிந்தனைகள் பாரதியாரின்,

"கல்வி யென்னும் வலிமை கொண்ட கோட்டை கட்டினான் - நல்ல கருதினால் அதனைச் சூழ்ந்தொரு அகழி வெட்டினான் என்று திலகனைப் போற்றும் இடந்தனிலும்,

"கல்வியைப் போலறிவும் அறிவினைப் போலக் கருணையும்

கருணை போலப் பலவித ஊக்கங்கள்

செயுந்திறனுமொடு நிகரின்றிப் படைத்த வீரன்"

என்று தாதாபாய் நவரோஜியைப் போற்றிப் புகழும் இடந்தனிலும் ஒன்றுவதைக் காணமுடிகிறது (Rajendran, 2005).

## பாரதியாரின் கல்விச் சிந்தனைகளும் சமுதாயப் பயன்பாடும்

இருபதாம் நூற்றாண்டின் இணையற்றக் கவிஞரான பாரதி, இந்த மண்ணில் சாதி மத வேறுபாடுகளைக் களைந்து எல்லாரும் ஓர் குலம்; எல்லாரும் ஓர் நிறை! என்று வாழ வேண்டும் எனக் கனவு கண்டவர். ஒப்பில்லாத ஒரு பொதுவுடைமை சமுதாயத்தை உருவாக்க முயன்றவர். பழமைக்கும் புதுமைக்கும் ஒரு பாலமாகத் திகழ்ந்தவர் என்பதற்கு அவர் பாடல்களில் பலவற்றை உதாரணம் சுட்டலாம் என்றாலும் சிலவற்றை மட்டும் சொல்லிட இத்தலைப்பு விழைகின்றது (Rajendran, 2005; Lakshmi, 2009).

### சமுதாய முன்னேற்றம்

சமுதாய முன்னேற்றத்திற்குத் தேவையானது ஒற்றுமை. அதற்கு அடிப்படை மனிதநேயம். பாரத சமுதாயத்தின் மேம்பாட்டுக்குத் தேவை ஒற்றுமையே என்று கூறாது, அறிவுத் தெளிவு ஏற்பட வேண்டும் என்று வலியுறுத்திய பாரதியாரின் சிந்தனை வரவேற்கத்தக்கது.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில்

ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே

நன்றிது தேர்ந்திடல் வேண்டும் - இந்த

ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?"

இந்தியர் அனைவரும் வாழ்விலும் சாவிலும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்று விரும்பியவர் (Rajendran, 2005).

"எப்பதம் வாய்த்திடுமேனும்- நம்மில்

யாவருக்கும் அந்நிலை பொதுவாகும்!

முப்பது கோடியும் வாழ்வோம்- வீழில்

முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்"

மக்கள் தங்களுக்குள் உயர்வு தாழ்வு கருதாமல் சரிநிகர் சமானமாக வாழ வேண்டும் என்று விரும்பியவர் (Velammal, 2019).

"ஏழை என்றும் அடிமை என்றும்

எவனும் இல்லை சாதியில்

இழிவு கொண்ட மனித ரென்பது

இந்தியாவில் இல்லையே
வாழிகல்வி செல்வம் எய்தி
மனம் மகிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒரு நிகர்
சமானமாக வாழ்வமே"

## புத்தாக்கச் சிந்தனைகள்

### குழந்தை மணம்

குழந்தைகளுக்குச் சிறுவயதிலேயே திருமணம் செய்து வைக்கும் பழக்கத்தைக் கடுமையாக எதிர்த்தவர் பாரதியார். குழந்தைத் திருமணம் கொலை செய்வதை விடக் கொடுமையானது என்று எச்சரித்தவர் (Velammal, 2019)

"பாலருந்தும் மதலையர் தம்மையே
பாதகக் கொடும்பாதகப் பாதகர்
மூலத்தோடு குலங்கெட நாடிய
மூட மூடநிர் மூடப்புலையர்தாம்
கோலமாக மணத்திடைக் கூட்டுமிக்
கொலையெனும் செயல் ஒன்றினை"

### ஆண்- பெண் கற்பு நிலை

ஆணுக்குக் கற்பு தேவையில்லை, பெண்ணுக்குத்தான் தேவை என்ற ஆணாதிக்க நிலையை அடியோடு அழிக்க எண்ணியவர் பாரதியார். ஒரு வீடு தீப்பற்றி எரிந்தால் வீட்டிலுள்ள கூரையும் தீப்பற்றி எரிவது போல் ஒரு ஆண் கற்பு இழந்தால் அந்த சமுதாயத்தில் தீங்கு நேராதா? என வாதிட்டவர் பாரதியார்.

"ஆணெல்லாம் கற்பை விட்டுத் தவறு செய்தால்
அப்போது பெண்மையும் கற்பழிந்திடாதோ?
நாணமற்ற வார்த்தையன்றோ? வீட்டைச் சுட்டால்
நலமான கூரையுந்தான் எரிந்திடாதோ?"

'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற பண்பாட்டை மறந்த ஆண்களின் ஒழுக்கக் கேடால்தான் அச்சுறுத்தும் 'எய்ட்ஸ்' போன்ற கொடிய நோய்கள் உருவாயின. எனவே தான் 'கற்பு' என்பதை இருவருக்கும் பொதுவாக வைப்போம் என்று பாடினார் (Velammal, 2019).

### பெண்கல்வி

நாட்டின் முன்னேற்றம் என்பது பெண் கல்வியில் தான் உள்ளது என்பதை உணர்ந்து பெண்களுக்குக் கல்வி உரிமை வேண்டும் என்று குரல் கொடுத்தவர் (Rajeswari, 2020).

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்"

என்ற புரட்சி நோக்கோடு புதியதொரு கோணத்தில் பெண்ணுரிமை பாடல்களைப் பாடியவர் பாரதியார். பெண் விடுதலை பெற்றால் தான் நாடு விடுதலை பெறும் என்ற கருத்துடையவர். ஒரு

ஆண் கல்வியறிவு பெற்றால் அது அந்த குடும்பத்திற்கு மட்டுமே பயன் தரும். ஆனால் ஒரு பெண் கல்வி கற்றால் அது அந்த சமுதாயத்தையே உயர்த்தும் என்ற நம்பிக்கை கொண்டவர் (Rajeswari, 2020).

“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்

பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்

எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்

இளைப்பில்லை காணென்று கும்மியடி”

பெண்களுக்கு வாக்குரிமை கூடத் தராத நாடுகள் இருந்திருக்கின்றன. ஆண்களுக்கு நிகராக பெண்களாலும் அனைத்துத் துறைகளிலும் முத்திரை பதிக்க முடியும் என்று அன்றே கூறிய தீர்க்கதரிசி (Rajeswari, 2020).

“ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்

அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்”,

“பெண்ணுக்கு விடுதலை இல்லையெனில்

உலகினிலே வாழ்க்கை யில்லை”,

“பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா

பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா“

என்றும் பெண்ணின் பெருமையைக் கொண்டாடியதோடு அவர்களின் கல்வி இடர் நீங்கி பெண்ணிய விடுதலை, சமூக உரிமை, சம உரிமை பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டும் என்று விரும்பியவர் (Rajeswari, 2020).

## மேலாண்மைச் சிந்தனை

மேலாண்மைக் கல்வியில் ‘மாஸ்லோ’ என்ற அறிஞரால் உருவாக்கப்பட்டது ‘தேவைவிதி’. உளவியல், பாதுகாப்பு, அன்பு, சமூகத்தேவை அல்லது அங்கீகாரம் என்று அடிப்படைத் தேவைகளுக்கு ஏற்ப தேவைகள் விரிவடையும் என்பது தான் ‘தேவைவிதி’.

பாரதியார் பாடிய,

“காணி நிலம் வேண்டும்- பராசக்தி

காணி நிலம் வேண்டும் -அந்தக்

காணி நிலத்திடையே ஓர் மாளிகை

கட்டித் தரவேண்டும்”

என்ற பாடல் இந்த மேலாண்மைக் கோட்பாட்டைப் பிரதிபலிப்பதாகவே உள்ளது (Rajeswari, 2020).

தேவையானபோது தேவைக்குத் தகுந்தவாறு புதியனவற்றைப் புகுத்திக் கொள்ள வேண்டும். ஆனால் புதியனவற்றை விரும்பிப் புகுத்தும் போது பழமை பித்துடைய பாமரர்களின் எதிர்ப்புகள் அவ்வப்போது தோன்றும். அதற்கு அஞ்சக் கூடாது என்று நெஞ்சுறுதியோடு கூறியவர் (Rajeswari, 2020).

“புதியன விரும்பு”,

“தொன்மைக்கு அஞ்சேல்”

அமெரிக்கா, இங்கிலாந்து தவிர்த்து பிற நாடுகளான கனடா, ஜெர்மனி இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகள் மேலாண்மைக் கல்வியைத் தங்கள் தாய்மொழியிலேயே அலுவல் மொழியாகவும் கற்றல் மொழியாகவும் பயன்படுத்தி வருகின்றன. இந்நிலை தமிழிலும் வர வேண்டும் என்று விரும்பியவர் (Rajeswari, 2020).

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே

அதைத் தொழுது படித்திடடி பாப்பா"

என்று கூறியதோடு மேலாண்மைக் கல்வியில் 'குழுவேலை' எனப்படும் (Rajeswari, 2020). மேலாண்மைக் கருத்துக்குக்

"கொத்தித் திரியுமந்தக் கோழி -அதைக்

கூட்டி விளையாடு பாப்பா"

எனப் பிறர்க்கும் மதிப்பளிக்கச் சொன்னவர். கருத்து,பார்வை, குணம் என்பவை ஒவ்வொரு மனிதரிடம் வேறாக இருந்தாலும் குழுவாக இணைந்து செயல்பட அன்பு செலுத்துதல், விட்டுக்கொடுத்தல், அரவணைப்பு, அடுத்தவர் குணாதிசயங்களைப் புரிந்துகொண்டு மதிப்பளித்தல் வேண்டும் என்று விரும்பியவர் (Rajeswari, 2020).

"வண்டி இழுக்கும் நல்ல குதிரை

நெல்லு வயலில் உழுதுவரும் மாடு

அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு -இவை

ஆதரிக்க வேணுமடி பாப்பா"

## முடிவுரை

ஒரு புதிய காலத்தின் பிறப்பை அறிவிக்கின்ற ஒளிமிக்க யுகப்புருஷனாகத் தோன்றியவன் பாரதி. பாரதியிடம் காணப்படும் நிறைய முரண்கள் அவன் தோன்றிய காலச் சூழ்நிலைகளின் பிரதிபலிப்புகள் என்பதை அவனது படைப்புகள் முன்னிறுத்துகின்றன. அவன் காலத்து மனிதர்களின் மனத்துள்ளே மண்டிக் கிடந்த அறியாமை இருளகற்றி ஒளி மிக்க ஞானச்சுடரினை ஏற்ற அரும்பாடுபட்டவன் பாரதி. பாரதியின் பாடல்களில் பன்முகப் பார்வைகள் விரிந்து கிடந்தாலும் அவற்றின் பின்னணியில் பாரதியின் பரந்துபட்டக் கல்விச் சிந்தனைகள் ஒளிந்து கிடக்கின்றன. அவற்றை ஒளிரச் செய்யும் முயற்சியில் இக்கட்டுரை முனைந்தது இது முடிவல்ல; அடுத்துத்தொடரும் ஆய்வுக் கட்டுரைகளுக்கான அடித்தளம்.

## References

Balasubrahmanyam, P.S., (2005) Karkkum Kulanthai, Tamil Nadu Paadanool Kazhagam, Chennai, India.

Lakshmi, S., (2009) Education In India, Tamil Nadu Paadanool Kazhagam, Chennai, India.

Meiyappan, S., (2000) Bharathiyar Kavithaikal, Thendral Nilaiyam, Chennai, India.

Puliyur Kesigan, (2010) Thirukkural, Poompuhar Pathippagam, Chennai, India.

Rajendran, P., (2005) Bharathin Padaipujalil Panmuga Paarvai, Paari Nilaiyam, Chennai, India.

Rajeswari, (2020) Bharathiyar Kavithaikal, Rajeswari Pathippagam, Sivakasi, India.

Velammal, P., (2019) Bharathiyar Kavithaikal, Pothigai Veeliyeedu, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License